2022 ஜனவரி 7]

அன்றைக்கு ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு இருந்தது. அப்போது, டெல்லியில் இருந்த மாண்புமிகு பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. முரளி தியோரா அவர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டுக்கு கூடுதலாக மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அதனடிப்படையில், அன்றைக்கு மண்ணெண்ணெய்யின் அளவைக் குறைக்கவில்லை. அந்த ஒதுக்கீட்டை இரண்டு முறை உயர்த்திக் கொடுத்தார்கள். கடந்த பத்தாண்டுக் காலத்தில் மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி, இன்னும் கூடுதலாக மண்ணெண்ணெய்யைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான விளக்கத்தைச் சொல்லிவிட்டார். எனவே, சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்கின்ற முயற்சிக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

15—

ஜவுளிப் பூங்கா

***4084—திரு. ஈ. ராஜா:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன்கோவில் தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சங்கரன்கோவில் தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமைத்திட இதுவரை முதலீட்டாளர்களிடமிருந்து கோரிக்கை ஏதும் பெறப்படாததால், இப்பொருள் தொடர்பான முன்மொழிவு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா அவர்கள்.*

திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மிகப் பெரிய தொழிலான ஜவுளித் துறையில் 26 இலட்சம் விசைத்தறிகள் உள்ளன. விசைத்தறிகள் அதிகம் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு 6 இலட்சம் விசைத்தறிகளுடன் இரண்டாம் இடத்தில் உள்ளது. இதன்மூலம் நேரடியாக 25 இலட்சம் தொழிலாளர்களும், மறைமுகமாக 25 இலட்சம் தொழிலாளர்களும் பயன்பெறுகின்றனர். தமிழ்நாட்டில் நெசவுத் தொழிலை பிரதானமாகக் கொண்ட பகுதியாக எங்களுடைய சங்கரன்கோவில் தொகுதியின் சுற்றுவட்டாரப் பகுதிகள் இருக்கின்றன. அங்கு சுமார் 25 ஆயிரம் நெசவுத் தொழிலாளர்கள் நேரடியாகவும், 11 ஆயிரம் நெசவு சார்ந்த தொழிலாளர்கள் மறைமுகமாகவும் வாழ்ந்து வருகின்றனர். எனவே, எங்களுடைய பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைப்பதன்மூலம் சுமார் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுடைய வாழ்வில் விடியல் பிறக்கும். மேலும்,* Turkey towel *எனப்படும் பூ துண்டு, உயர்தர காட்டன் சேலைகள், தரமான கைலிகள், வேட்டிகள், துண்டுகள் என அனைத்து இரகங்களும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. பெரிய தொழிலதிபர்கள் எங்கள் தொகுதியில் உள்ளனர். இங்கு தொழில் முதலீட்டாளர்கள் பெரிய அளவில் கிடைக்க வாய்ப்புகள் உள்ளன. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கருணை கூர்ந்து, தென்மண்டல மேம்பாட்டிற்காக, சங்கரன்கோவில் தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமைத்துத் தர வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 ஜனவரி 7]

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஜவுளித் துறையில் வேலைவாய்ப்பை அதிகரிக்கவும், ஜவுளி ஏற்றுமதியைப் பெருக்கவும், தமிழக அரசு சார்பில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், 'ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டம்'*–Scheme for Integrated Textile Park (SITP) *செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், மொத்தத் திட்டத் தொகையில், ஒன்றிய அரசு 40 சதவிகிதம் மானியமாக வழங்கி வருகின்றது. தமிழக அரசு மானியமாக 9 சதவிகிதம், அதாவது ரூ.9 கோடிக்கு மிகாமல் வழங்குகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 9 ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு, அவற்றில், தற்போது 4 பூங்காக்கள் செயல்பட்டு வருகின்றன. ஒன்று உயர் தொழில்நுட்ப நெசவு பூங்கா,* Hi–tech Weaving Park, Palladam, *இரண்டாவது,* Madurai Integrated Textile Park, Vadipatti, *மூன்றாவது,* Integrated Textile Park, Karur, *நான்காவது,* Hi–tech Weaving Park, Namakkal. *மேலும் ஐந்து பூங்காக்கள் செயல்படுத்தப்பட உள்ளன.* Tiruppur GILT Integrated Textile Park, SIMA Textile Processing Centre, Cuddalore, Perarignar Anna Handloom Silk Park, Kancheepuram, Pallavada Hi–tech Textile Park, Erode, Handloom Garment Park, Nagapattinam. *எனவே, சங்கரன்கோவில் தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க தொழில் முனைவோர் முன்வந்தால், நிச்சயமாக பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கப்படும்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா அவர்கள்.*

திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில், குறிப்பாக, கரிசல் மண்ணில்தான் அதிகமாக பருத்தி விளைகிறது. எனது தொகுதிக்குட்பட்ட சங்கரன்கோவில், குருவிகுளம், மேலநீலிதநல்லூர் பகுதிகளில் தென் தமிழகத்தில் அதிகமாக பருத்தி உற்பத்தி செய்யப்படுகின்றது. தமிழகத்தில் கோயம்புத்தூருக்கு அடுத்தபடியாக, தஞ்சாவூரில், இந்திய பருத்திக் கழகம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று சங்கரன்கோவில் பகுதியிலும், இந்திய பருத்திக் கழகம் அமைக்கப்பட்டால் அங்கு பருத்தியை உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்குக் கூடுதல் விலை*

கிடைக்கும் என்கிற அடிப்படையில், சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் இந்திய பருத்திக் கழகம் அமைக்க வேண்டுமென, தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தி.மு.க. ஆட்சிக்கு வருகின்றபோதெல்லாம் நெசவாளர்களுக்கும் சலுகைகள் வழங்கப்படுகின்றன. அதனால் அவர்களுடைய வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. கைத்தறிகள் அதிகமாக உள்ள காலகட்டத்தில், கைத்தறிகளைப் பாதுகாக்க மத்திய அரசால் கதர்க் கட்டுப்பாட்டுச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இன்று கைத்தறிகள் பெரும்பாலும் விசைத்தறிகளாக மாறியுள்ளன. அதிக கைத்தறிகள் உள்ள காலகட்டத்தில் கொண்டுவரப்பட்ட இந்தக் கதர்க் கட்டுப்பாட்டுச் சட்டத்தால் விசைத்தறி நெசவாளர்களுக்கு தற்போது கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், பருத்திக் கொள்முதல் நிலையம் அங்கே அமைக்கப்படுமா என்று கேள்வி கேட்டுவிட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர், பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அமைக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு அமைச்சர் அமைக்கப்படும் என்று சொல்லிவிட்டார், நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடு)*

வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

16—

மருத்துவக் கல்லூரி

***7100—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?